**வெண்டை சாகுபடியில் கிடைக்கும் லாபம்**
First Published : 01 Apr 2010 12:00:00 AM IST

திருக்கோவிலூர், மார்ச் 31:   திருக்கோவிலூர் பகுதியில் உள்ள விவசாயிகள் குறுகிய காலத்தில் அதிக லாபம் தருவதாகக்கூறி தற்போது வெண்டை பயிர் செய்வதில் ஆர்வம் காட்டி வருகின்றனர்.
 திருக்கோவிலூர் பகுதியில் குறைந்த நாளில் அறுவடைக்கு வரும் காய்கறி பயிர்களில் வெண்டை முக்கிய பங்கு வகிக்கின்றது. அனைத்து வகை மண்ணிலும் நன்கு வளரக்கூடிய வெண்டையில், தற்போது யுஎஸ் 7109 மற்றும் மஹிகோ 10 ஆகிய வீரிய ஒட்டு ரகங்களை விவசாயிகள் சாகுபடி செய்து வருகின்றனர். திருக்கோவிலூர் வட்டார ஒருங்கிணைந்த தோட்டக்கலை அபிவிருத்தி திட்டத்தின் மூலம் விவசாயிகளுக்கு 50 சதவீதம் மானியத்தில் யுஎஸ் 7109 என்ற வீரிய ஒட்டு வெண்டை ரக விதைகள் விநியோகம் செய்யப்படுகிறது.  1 ஏக்கர் நிலத்தில் வெண்டை பயிர் செய்வதன் மூலம் விதைத்த 45-ம் நாளில் இருந்து 1 நாள் இடைவெளியில் 30 அறுவடை மேற்கொள்ளலாம் என்றும், ஒரு அறுவடைக்கு சராசரியாக 100 கிலோ மகசூல் என்றால் 30 அறுவடையில் அரை ஏக்கர் பரப்பில் 3000 கிலோ மகசூல் கிடைக்க வாய்ப்புள்ளது என்றும், நிகர லாபமாக ரூ.20 ஆயிரம் கிடைப்பதாகவும் வெண்டை விவசாயிகள் கூறுகின்றனர்.  இதில் குறிப்பாக திருக்கோவிலூர் தோட்டக்கலை உதவி இயக்குநர் எஸ்.ஐ.முகைதீன் அறிவுரைப்படி உதவி வேளாண்மை அலுவலர்களான கிருஷ்ணன், சரவணன், ஆகியோர் இப்பகுதியில் உள்ள விவசாயிகளை சந்தித்து உற்பத்தி செய்யும் காய்கறிகளை பெங்களூர் சபல் மார்க்கெட், சென்னை கோயம்பேடு மார்க்கெட்டுகளில் விற்பனை செய்யும் வழிமுறைகள் பற்றி எடுத்துக்கூறி வருகின்றனர்.

Agriculture

**பூச்சிகளை விரட்டும் "அரப்பு மோர்' கரைசல்**
First Published : 01 Apr 2010 12:00:00 AM IST

சிதம்பரம், மார்ச்  31: இயற்கை வேளாண் பண்ணைகளை கிராமங்களில் உருவாக்கி குறைந்த செலவில் அதிக லாபம் தரும் வேளாண் தொழில்நுட்பங்களை தமிழக விவசாயிகள் தெரிந்து கொள்வது தற்கால சூழ்நிலையில் மிகவும் அவசியமானதாகும்.
÷இயற்கை தொழில்நுட்பங்களில் ஒன்றான அரப்பு மோர் கரைசல் முக்கிய பங்கு வகிக்கிறது. குறிப்பாக சிறு மற்றும் குறு விவசாயிகள் தங்கள் கிராமங்களில் பண்ணை மகளிர் அமைக்கும் வீட்டுக் காய்கறி மற்றும் பயிர் சாகுபடி நிலங்களில் எளிதாக வேளாண் பணிகளை சிறப்பான முறையில் செய்து அதிக லாபம் பெற அரப்பு மோர் கரைசலை தயாரிக்கவும், தொடர்ந்து பயன்படுத்துவது வாயிலாக அதிகளவு மகசூல் பெற முடியும்.
÷தயாரிக்கும் முறை: நமது ஊர்களில் அதிகமாக கிடைக்கும் அரப்பு இலை அல்லது உசிலை மர இலைகளை 2 கிலோ அளவில் பறித்துக் கொள்ள வேண்டும். பின்னர் நன்றாக நீருடன் சேர்த்து அரைக்க வேண்டும்.
÷இதிலிருந்து 5 லிட்டர் அளவில் கரைசல் எடுத்து புளித்த மோருடன் சேர்க்க வேண்டும். பின்னர் இந்தக் கரைசல் கலவையை மண்பானை அல்லது பிளாஸ்டிக் வாளியில் ஒருவார காலத்துக்கு புளிக்க விட வேண்டும். பின்பு ஒரு லிட்டர் அரப்பு மோர் கரைசலுடன் 10 லிட்டர் தண்ணீர் கலந்து விவசாயிகள் பயிர்களுக்கு எளிதாக தெளிக்கலாம். கை தெளிப்பானில் தெளிக்கும் போது ஒரு டேங்க் அளவுக்கு தெளிக்கும் அளவு இது ஒரு ஏக்கர் பயிருக்கு 10 தெளிப்பான் டேங்க் அளவுக்கு தெளிக்க வேண்டியிருக்கும்.

÷விவசாயிகள், பண்ணை மகளிர் குறைந்த செலவில் அரப்பு மோர் கரைசலை தங்கள் வீடுகளிலேயே தயார் செய்து குறைந்த காலத்தில் பயன்படுத்தி அதிக மகசூல் பெற முடியும்.

÷பிற பயன்கள்: அரப்பு மோர் கரைசல் தெளிப்பதன் வாயிலாக எளிதாக பயிர் பாதுகாப்பு தொடர் நடவடிக்கைகளை விவசாயிகள் மேற்கொள்ள முடியும். அரப்பு மோர் கரைசல் தெளிப்பதால் பூச்சிகள் தூர ஓடிவிடும்.÷குறைந்த செலவில் விவசாயிகள் தங்களின் வீடுகளில், வயல்களில், தோட்டங்களில் உள்ள பயிரை எளிதாக பாதுகாக்க முடியும். அரப்பு மோர் கரைசலை பூப் பிடிக்கும் பருவத்தில் தெளிப்பதால் பயிர் வளர்ச்சி வேகமாக காணப்படும். நிறையப்பூக்கள் பூக்கும்.

÷அரப்பு மோர் கரைசலில் ஜிப்ரலிக் அமிலம் என்ற வளர்ச்சி ஊக்கி உள்ளதால் பயிர்கள் குறைந்த காலத்தில் நல்ல வளர்ச்சியை தந்து அதிக விளைச்சல் மற்றும் மகசூல் கிடைக்கும்.

÷எனவே குறைந்த செலவில், காலத்தில் விவசாயிகளிடம் உள்ள இயற்கை வேளாண்மை தொழில்நுட்பங்களை கொண்டு எளிதாக தயாரிக்கப்படும் அரப்பு மோர் கரைசலை தமிழக விவசாயிகள் பயன்படுத்தி அதிக லாபம் பெறலாம் என அண்ணாமலைப் பல்கலைக்கழக வேளாண் விரிவாக்கத்துறை விரிவுரையாளர் தி.ராஜ்பிரவீன் கூறியுள்ளார்.

**விவசாயிகள் நாட வேண்டிய பயிற்சி மையம்**

First Published : 01 Apr 2010 12:00:00 AM IST

காஞ்சிபுரம், மார்ச் 31:  காஞ்சிபுரம் அருகே உள்ள ஏனாத்தூரில் செயல்பட்டு வரும் உழவர் பயிற்சி மையம் விவசாயிகளை பொருளாதார ரீதியாக மேம்படுத்தும் பயிற்சிகளை அளித்து வருகிறது. விவசாயத்தோடு கால்நடை வளர்ப்பு உள்ளிட்ட பல்வேறு தொழில்கள் மூலம் அதிக வருமானம் பெறுவதற்கான பயிற்சிகளையும் அளித்து வருகிறது.

÷தமிழ்நாடு கால்நடை மருத்துவ அறிவியல் பல்கலைக்கழகத்தால் நிறுவப்பட்ட இப் பயிற்சி மையத்தில் கால்நடை வளர்ப்பு, கோழி வளர்ப்பு குறித்த பயிற்சிகளை விவசாயிகளுக்கு அளித்து வருகிறது.

வேலையில்லாதோர், சுய தொழில் புரிவோர், சுய உதவிக் குழு அங்கத்தினர் ஆகியோருக்கும் பல்வேறு பயிற்சிகளை அளித்து வருகிறது.

÷கடந்த சில மாதங்களாக ஜப்பானிய காடை வளர்ப்பு, முயல் வளர்ப்பு, வெள்ளாடு வளர்ப்பு, கால்நடை வளர்ப்பில் தீவனம் மற்றும் தீவனப் பயிர் மேலாண்மை ஆகியன குறித்து பயிற்சி அளிக்கப்பட்டது.

÷இப் பயிற்சி மையம் குறித்த விழிப்புணர்வை விவசாயிகளிடத்து அதிகளவில் ஏற்படுத்த வேண்டும். மேலும், அவர்களுக்கு விஞ்ஞான ரீதியாக பயிற்சி அளிக்க வேண்டும் என்று விவசாயிகள் சங்கப் பிரதிநிதிகள் வலியுறுத்துகின்றனர்.

÷இப் பயிற்சி மையங்களில் ஜப்பானிய காடை வளர்ப்பு போன்ற வித்தியாசமான பயிற்சி அளிக்கும்போது அதிகளவில் விவசாயிகள் பங்கேற்கின்றனர். அதேவேளையில், மாடு, ஆடு வளர்ப்பு குறித்து பயிற்சி அளிக்கும்போது விவசாயிகளின் வருகை குறைந்த அளவிலேயே உள்ளது.

÷ஆடு மற்றும் மாடுகள் வளர்ப்பாக இருந்தாலும் இவைகளை நவீன முறையில் வளர்ப்பது குறித்தும், அவைகள் நன்றாக வளர எதுபோன்ற தீவனங்கள் வழங்கப்பட வேண்டும், அவற்றை நோயில் இருந்து பாதுகாப்பது போன்ற பல்வேறு விவரங்களை பயிற்சியில் பங்கேற்றால் தெரிந்து கொள்ள முடியும் என்கின்றனர் சில விவசாயிகள். மேலும், பயிற்சி நாள்கள் தவிர மற்ற நாள்களில் விவசாயிகள் கால்நடை வளர்ப்பில் தங்களுக்கு இருக்கும் சந்தேகங்களை நேரில் சென்று கேட்டு தெரிந்து கொள்ளலாம்.

÷இது குறித்து மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் நகரக் குழு உறுப்பினர் இ. ராமநாதன் கூறியது: ""இப் பயிற்சி மையத்தில் பல்வேறு பயிற்சிகள் அளிப்பதாக அவ்வப்போது அறிவிப்பு வெளியாகிறது. ஆனால், இம் மையம் நகரத்தை விட்டு தள்ளி உள்ளது. இதனால் விவசாயிகள் பலர் அங்கு செல்ல முடிவதில்லை.

இதுபோல் பயிற்சி நாள்களில் அப் பகுதிகளுக்கு விவசாயிகள் எளிதில் செல்லும் வகையில் வாகன வசதிகள் ஏற்படுத்த

வேண்டும்.
இப் பயிற்சி மையம் அளிக்கும் நவீன பயிற்சிகள் குறித்து விவசாயிகள் மத்தியில் உரிய விழிப்புணர்வை ஏற்படுத்த வேண்டும்" என்றார்.

**விவசாயிகள் நாட வேண்டிய பயிற்சி மையம்**

First Published : 01 Apr 2010 12:00:00 AM IST

காஞ்சிபுரம், மார்ச் 31: காஞ்சிபுரம் அருகே உள்ள ஏனாத்தூரில் செயல்பட்டு வரும் உழவர் பயிற்சி மையம் விவசாயிகளை பொருளாதார ரீதியாக மேம்படுத்தும் பயிற்சிகளை அளித்து வருகிறது. விவசாயத்தோடு கால்நடை வளர்ப்பு உள்ளிட்ட பல்வேறு தொழில்கள் மூலம் அதிக வருமானம் பெறுவதற்கான பயிற்சிகளையும் அளித்து வருகிறது.
÷தமிழ்நாடு கால்நடை மருத்துவ அறிவியல் பல்கலைக்கழகத்தால் நிறுவப்பட்ட இப் பயிற்சி மையத்தில் கால்நடை வளர்ப்பு, கோழி வளர்ப்பு குறித்த பயிற்சிகளை விவசாயிகளுக்கு அளித்து வருகிறது.
வேலையில்லாதோர், சுய தொழில் புரிவோர், சுய உதவிக் குழு அங்கத்தினர் ஆகியோருக்கும் பல்வேறு பயிற்சிகளை அளித்து வருகிறது.
÷கடந்த சில மாதங்களாக ஜப்பானிய காடை வளர்ப்பு, முயல் வளர்ப்பு, வெள்ளாடு வளர்ப்பு, கால்நடை வளர்ப்பில் தீவனம் மற்றும் தீவனப் பயிர் மேலாண்மை ஆகியன குறித்து பயிற்சி அளிக்கப்பட்டது.
÷இப் பயிற்சி மையம் குறித்த விழிப்புணர்வை விவசாயிகளிடத்து அதிகளவில் ஏற்படுத்த வேண்டும். மேலும், அவர்களுக்கு விஞ்ஞான ரீதியாக பயிற்சி அளிக்க வேண்டும் என்று விவசாயிகள் சங்கப் பிரதிநிதிகள் வலியுறுத்துகின்றனர்.
÷இப் பயிற்சி மையங்களில் ஜப்பானிய காடை வளர்ப்பு போன்ற வித்தியாசமான பயிற்சி அளிக்கும்போது அதிகளவில் விவசாயிகள் பங்கேற்கின்றனர். அதேவேளையில், மாடு, ஆடு வளர்ப்பு குறித்து பயிற்சி அளிக்கும்போது விவசாயிகளின் வருகை குறைந்த அளவிலேயே உள்ளது.
÷ஆடு மற்றும் மாடுகள் வளர்ப்பாக இருந்தாலும் இவைகளை நவீன முறையில் வளர்ப்பது குறித்தும், அவைகள் நன்றாக வளர எதுபோன்ற தீவனங்கள் வழங்கப்பட வேண்டும், அவற்றை நோயில் இருந்து பாதுகாப்பது போன்ற பல்வேறு விவரங்களை பயிற்சியில் பங்கேற்றால் தெரிந்து கொள்ள முடியும் என்கின்றனர் சில விவசாயிகள். மேலும், பயிற்சி நாள்கள் தவிர மற்ற நாள்களில் விவசாயிகள் கால்நடை வளர்ப்பில் தங்களுக்கு இருக்கும் சந்தேகங்களை நேரில் சென்று கேட்டு தெரிந்து கொள்ளலாம்.
÷இது குறித்து மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் நகரக் குழு உறுப்பினர் இ. ராமநாதன் கூறியது: ""இப் பயிற்சி மையத்தில் பல்வேறு பயிற்சிகள் அளிப்பதாக அவ்வப்போது அறிவிப்பு வெளியாகிறது. ஆனால், இம் மையம் நகரத்தை விட்டு தள்ளி உள்ளது. இதனால் விவசாயிகள் பலர் அங்கு செல்ல முடிவதில்லை.
இதுபோல் பயிற்சி நாள்களில் அப் பகுதிகளுக்கு விவசாயிகள் எளிதில் செல்லும் வகையில் வாகன வசதிகள் ஏற்படுத்த வேண்டும்.
இப் பயிற்சி மையம் அளிக்கும் நவீன பயிற்சிகள் குறித்து விவசாயிகள் மத்தியில் உரிய விழிப்புணர்வை ஏற்படுத்த வேண்டும்" என்றார்.

**செஞ்சி ஒழுங்குமுறை விற்பனை கூடத்தில் 4-வது நாளாக நெல் கொள்முதல் நிறுத்தம்**

First Published : 01 Apr 2010 12:14:40 AM IST

செஞ்சி, மார்ச் 31: வியாபாரிகள், தொழிலாளர்கள் இடையே நடைபெற்ற பேச்சுவார்த்தை தோல்வி அடைந்ததால், செஞ்சி ஒழுங்குமுறை விற்பனைக் கூடத்தில் 4-வது நாளாக புதன்கிழமை நெல் கொள்முதல் நிறுத்தப்பட்டது. இதனால் விவசாயிகள் ஏமாற்றமடைந்தனர்.

÷தற்போது சம்பா அறுடைக் காலமாக இருப்பதால் செஞ்சி ஒழுங்குமுறை விற்பனை கூடத்துக்கு அதிக நெல்வரத்து உள்ளது. இதனால் இடப்பற்றாக்குறை ஏற்பட்டதால் 30-ம் தேதி நெல் கொள்முதலை நிறுத்த முடிவு செய்யப்பட்டது. இந்நிலையில் கூலியை உயர்த்தி தரக்கோரி ஒழுங்குமுறை விற்பனைக்கூட தொழிலாளர்கள் செவ்வாய்க்கிழமை சாலை மறியலில் ஈடுப்பட்டனர்.

÷போலீஸ்õர் தலையீட்டின் பேரில் இப் போராட்டம் விலக்கிக் கொள்ளப்பட்டது. புதன்கிழமை வியாபாரிகள், தொழிலாளர்களிடையே பேச்சுவார்த்தை நடைபெற்றது.

÷இதில் விழுப்புரம் மாவட்ட விற்பப்னைக் குழு தலைவர் கு.ராதாமணி, விழுப்புரம் மாவட்ட விற்பப்னைக் குழு செயலர் சண்முகம், செஞ்சி டி.எஸ்.பி. ராஜேந்திரன், வட்டாட்சியர் பொறுப்பு கோட்டீஸ்வரன், செஞ்சி விற்பனைக் குழு கண்காணிப்பாளர் சிவநேசன் மற்றும் நெல் வியாபாரிகள் சங்கத் தலைவர் குமரேசன், தொழிலாளர்கள் சங்கத் தலைவர் சேகர் உள்ளிட்டோர் பங்கேற்றனர்.

÷அப்போது, சாக்கு மாற்றுவதற்கு ஒரு மூட்டைக்கு தற்போது ரூ. 3.50 தருகின்றனர். இதை ரூ. 5 ஆக உயர்த்த வேண்டும். ஏற்றுக்கூலி தற்போது ரூ. 2.25 காசு தருகின்றனர். இதை ரூ. 2.75 ஆக உயர்த்த வேண்டும் என தொழிலாளர்கள் சார்பில் கேட்கப்பட்டது. இதை வியாபாரிகள் ஏற்க மறுத்து வரும் 9-ம் தேதி சங்க செயற்குழு கூட்டத்தில் முடிவு செய்து அறிவிப்பதாக கூறினர். இதனால் கூட்டத்தில் முடிவு ஏற்படவில்லை.

÷செஞ்சி ஒழுங்குமுறை விற்பப்னை கூடத்தில் கடந்த 4 நாள்களாக நெல் கொள்முதல் நிறுத்தப்பட்டு இருப்பதோடு கமிட்டியில் உள்ள 12 ஆயிரம் நெல் மூட்டைகளுக்கு விலை போடப்படாமல் உள்ளது. இந்நிலையில் பேச்சுவார்த்தை தோல்வியடைந்ததால் விவசாயிகள் பெரிதும் ஏமாற்றமடைந்தனர்.

இதனிடையே 4 நாள்களாக காத்திருக்கும் விவசாயிகளின் நெல் மூட்டைகளை மட்டும் வெளி ஆள்கள் மூலம் எடை போட்டு பணம் வழங்க முடிவு செய்யப்பட்டது.

**ரூ. ஒரு கோடியில் தென்னை வணிக வளாகம்**

First Published : 31 Mar 2010 10:43:38 AM IST

உடுமலை, மார்ச் 30: பெதப்பம்பட்டி, பொங்கலூரில் தலா ரூ. ஒரு கோடி மதிப்பீட்டில் தென்னை வணிக வளாகங்கள் கட்டட அடிக்கல் நாட்டு விழா, செவ்வாய்க்கிழமை நடைபெற்றது.

கோவை, திருப்பூர் மாவட்டங்களில் உடுமலை, பொள்ளாச்சி, ஆனைமலை, கிணத்துக்கடவு, குடிமங்கலம் பகுதிகளில் 50 ஆயிரம் ஹெக்டர் பரப்பளவில் தென்னை சாகுபடி செய்யப்பட்டு வருகிறது. இங்கிருந்து தேங்காய் தமிழகத்தின் பிற பகுதிகள் மற்றும் வெளி மாநிலங்களுக்கும் அனுப்பப்படுகிறது.

தேங்காய்களை பதப்படுத்தவும் மதிப்பூட்டப்பட்ட பொருளாகவும் மாற்றவும் எந்த வசதியும் இல்லாமல் இருந்தது. ஒருங்கிணைந்த அங்காடி வசதி இல்லாததாலும் விவசாயிகள் அவதிக்குள்ளாகி வந்தனர்.

இந்நிலையில், உடுமலையை அடுத்துள்ள பெதப்பம்பட்டி ஒழுங்குமுறை விற்பனைக் கூடத்தில் ரூ. ஒரு கோடி மதிப்பில் தென்னை வணிக வளாகம் கட்டட அடிக்கல் நாட்டு விழா செவ்வாய்க்கிழமை நடைபெற்றது.

இந்த வளாகத்தில் தேங்காய்களை மதிப்பு கூட்டப்பட்ட பொருளாக மாற்றும் வகையில் நார் மஞ்சி எடுத்தல், மஞ்சி கழிவை மட்கச் செய்து உரமாக்குதல், இளநீர் பதப்படுத்துதல், கொப்பரை உலர வைத்தல் மற்றும் தரம் பிரித்தல் பணி

களை செய்து கொள்ள வசதி செய்யப்பட உள்ளது. இங்கு வங்கியுடன் கூடிய உழவர் ஓய்வு இல்லம் கட்டவும் தீர்மானிக் கப்பட்டுள்ளது.

அடிக்கல் நாட்டு விழாவுக்கு திருப்பூர் மாவட்ட ஆட்சியர் சி.சமயமூர்த்தி தலைமை வகித்தார். நெடுஞ்சாலைத் துறை அமைச்சர் வெள்ளக்கோவில் மு.பெ.சாமிநாதன் தென்னை வணிக வளாக கட்டடத்துக்கு அடிக்கல் நாட்டினார்.

அவர் பேசுகையில், தேங்காய்களுக்கு உரிய விலை கிடைப்பதில்லை என்ற குறையைப் போக்கும் விதத்தில் நவீன குளிர்சாதன இயந்திரங்களுடன் கூடிய கிடங்கு தென்னை வணிக வளாகத்தில் அமைக்கப்பட உள்ளது. இதில் 50 டன் அளவுக்கு இருப்பு வைத்துக் கொள்ளலாம், என்றார்.

விழாவில் ஊரக தொழில் துறை அமைச்சர் பொங்கலூர் நா.பழனிசாமி, ரூ. 6 லட்சம் மதிப்புடைய விவசாயப் பொருட் களை நலத்திட்ட உதவியாக விவசாயிகளுக்கு வழங்கினார்.

தமிழ்நாடு வேளாண் விற்பனை வாரியத்தின் தலைவர் கேபிடி.கணேசன், கோவை விற்பனைக் குழு தலைவர் ஆ.நாச்சி முத்து ஆகியோர் பேசினர். உடுமலை நகர்மன்றத் தலைவர் செ.வேலுசாமி, தாராபுரம் எம்எல்ஏ பெ.பிரபாவதி, பிஆர்ஓ உமாபதி உள்ளிட்ட பலர் விழாவில் கலந்து கொண்டனர்.

பொங்கலூரிலும் வளாகம்:

இதேபோல பொங்கலூர் ஒழுங்குமுறை விற்பனைக் கூட வளாகத்தில் ரூ. ஒரு கோடி செலவில் குளிர்சாதன வசதிகளு டன் கூடிய வேளாண் விற்பனை வணிக வளாக கட் டட அடிக்கல் நாட்டு விழா செவ்வாய்க்கிழமை நடைபெற்றது.

இந்த விற்பனைக் கூடத்தில் சுமார் 50 டன் எடையுள்ள வெங்காயத்தை இருப்பு வைத்துக் கொள்ள வசதி செய்யப்பட் டுள்ளது.

**கொப்பரை கொள்முதல் உடனடியாக துவக்க வலியுறுத்தல் : விவசாயிகள் கூட்டத்தில் ஆவேசம்**

பொள்ளாச்சி : கொப்பரை மற்றும் நேரடி தேங்காய் கொள்முதலை உடனடியாக துவங்க வேண்டும் என்று பொள்ளாச்சியில் நடந்த விவசாயிகள் முறையீட்டுக்குழு கூட்டத்தில் வலியுறுத்தப்பட்டது.

பொள்ளாச்சி ஆர்.டி.ஓ., அன்பழகன் தலைமையில் விவசாயிகள் முறையீட்டுக்குழு கூட்டம் நடந்தது. தாசில்தார் வெங்கடேசன் முன்னிலை வகித்தார். பி.ஏ.பி., பாலாறு படுகை திட்டக்குழு தலைவர் பரமசிவம், பாசன சங்க தலைவர்கள் பெரியகருப்புசாமி, தமிழக விவசாயிகள் சங்க தலைவர் முத்துசாமி உள்பட பலர் பங்கேற்றனர்.

விவசாயிகள் பேசியதாவது: கொப்பரை கொள்முதல் திடீரென நிறுத்தம் செய்யப்பட்டுள்ளதால், தேங்காய் விலை சரியும் நிலை உருவாகி வருகிறது. கொப்பரை உற்பத்தி செய்யாததால், தேங்காயை நேரடியாக கொள்முதல் செய்ய வேண்டும் என்று 'நேபட்' நிறுவனம் உத்தரவிட்டுள்ளது. தமிழகத்தில் அத்திட்டத்தை உடனடியாக துவங்க வேண்டும். கூட்டுறவு வங்கியில் ஒரு லட்சம் ரூபாய் வரையிலும் எவ்வித அடமானம் இல்லாமல் கடன் வழங்க அரசு உத்தரவிட்டுள்ளது. ஆனால், கூட்டுறவு வங்கிகளில் கடன் கொடுப்பதில்லை.

வேலை உறுதி திட்டத்தில், பாசன கால்வாய்களை சுத்தம் செய்ய பல முறை வலியுறுத்தியும் பணிகள் நடக்கவில்லை. தண்ணீர் திருட்டும் அதிகமாக நடக்கிறது. இதை தடுக்க பொதுப்பணித்துறை, மின்வாரியம், வருவாய் துறை மற்றும் போலீசார் நடவடிக்கை எடுக்க வேண்டும். காண்டூர் கால்வாயை முழுமையாக புதுப்பிக்க 127.5 கோடி ரூபாய் நிதி ஒதுக்கப்பட்டுள்ளது. பி.ஏ.பி., திட்டத்தில் நிலுவையிலுள்ள ஆனைமலையாறு, நல்லாறு அணைகளை கட்டினால் பாசனத்திற்கு கூடுதலாக தண்ணீர் கிடைக்கும்.

விவசாய பயன்பாட்டிற்கு ஷிப்ட் முறையில் மின் வினியோகம் செய்யப்பட்டாலும், அடிக்கடி மின்பழுது ஏற்படுவதால் பாசனம் செய்வது பாதிக்கப்படுகிறது. இதே நிலை நீடித்தால் வறட்சியான காலத்தில் விவசாய உற்பத்தி பாதிக்கப்படும். இவ்வாறு, விவசாயிகள் பேசினார்.

அதிகாரிகள் பேசியதாவது: கொப்பரை கொள்முதல் ஏப்ரலில் துவங்க உத்தரவு வரும் என எதிர்பார்க்கப்படுகிறது. தேங்காயை நேரடியாக கொள்முதல் செய்வது தொடர்பாக எவ்வித உத்தரவும் வரவில்லை. கூட்டுறவு வங்கிகளில் ஒரு லட்சம் ரூபாய் வரை ஜாமீன் இல்லாமல் கடன் கொடுக்க அறிவுறுத்தப்பட்டுள்ளது. எந்த வங்கியில் ஜாமீன் கேட்கிறார்கள் என்று புகார் செய்தால் நடவடிக்கை எடுக்கப்படும்.

விவசாயத்திற்கான மின்வினியோகம் தடைபடாமல் கிடைக்க நடவடிக்கை எடுக்கப்படும். மின்வாரிய ஊழியர்கள் செம்மொழி மாநாட்டு பணிக்காக கோவை சென்றுள்ளதால் தற்போது மின்பழுதுகளை உடனடியாக சீரமைக்க முடியாத நிலை உள்ளது.

இவ்வாறு, அதிகாரிகள் விளக்கம் கொடுத்தனர்.

**நிர்வாக தவறு உண்மை!** பொள்ளாச்சி தாலுகா அலுவலகத்தில் பட்டா மாறுதல் மற்றும் வாரிசு சான்றுக்கு பெற மாதக்கணக்கில் காத்திருக்க வேண்டியுள்ளது. வாரிசு சான்று வழங்கும் பணியில் ஈடுபட்டுள்ள ஊழியர் அலட்சியமாக பதில் கூறுகிறார் என கூட்டத்தில் புகார் தெரிவிக்கப்பட்டது. அப்போது, ஆர்.டி.ஓ., அன்பழகன்; 'வாரிசு சான்று மற்றும் பட்டா மாறுதல் பெறுவதில் சில இடர்பாடுகள் உள்ளது. நிர்வாக தவறு இருப்பது உண்மைதான். புகார்கள் வந்த போது நான் நேரடியாக தலையீட்டு தீர்த்து வைத்துள்ளேன். மாத்திற்கு 500க்கும் மேற்பட்ட சான்றுகள் வழங்கும் போது, ஒரு சில சான்றுகள் கிடைக்க தாமதமாவதை தவிர்க்க முடியாது. விண்ணப்பிக்கும் அனைவருக்கும் தாமதமின்றி உடனடியாக சான்று கிடைக்க நடவடிக்கை எடுக்கப்படும்' என்றார்.

**பச்சை வேர்க்கடலை குழந்தைகளுக்கு கொடுக்காதீர்கள் : கலெக்டர் சீத்தாராமன் 'அட்வைஸ்'**

கடலூர் : கோடை காலம் துவங்கியுள்ளதால் குழந்தைகளுக்கு பச்சை வேர்க் கடலை அதிகம் கொடுக்க வேண்டாம் என கலெக் டர் அறிவுறுத்தியுள்ளார்.

கடலூர் சிப்காட் பகுதி மற்றும் அருகாமையில் அமைந்துள்ள கிராம மக்களின் கோரிக்கையை ஏற்று மாவட்ட நிர்வாகத்தால் ஏற்பாடு செய்த சிறப்பு தோல் சிகிச்சை முகாம் கண்ணாரப்பேட்டை ஆரம்ப சுகாதார நிலையத்தில் நடந்தது. சிப்காட் தொழிற்சாலை சங்கம், சாசன் கெமிக் கல்ஸ் அண்ட் ட்ரக்ஸ் நிறுவனத்தால் ஒருங்கிணைந்து நடத்திய முகாமில் பிரபல தோல் நோய் நல சிறப்பு மருத்துவ நிபுனர்களான ஜானகி, விஜய் கார்த்திக், இருதயராஜன் அடங்கிய குழுவினர் மற் றும் இணை இயக்குனர் ஜெயவீரக்குமார், பாஸ்கரன் உள்ளிட்டோர் முகாமில் பங்கேற்ற 160 பேரை பரிசோதித்து சிகிச்சை அளித்தனர்.

முகாமை கலெக்டர் சீத்தாராமன் ஆய்வு செய்தபோது, 'ஆலா' கரைசலை குடித்துவிட்டதாக மூன்று வயது குழந்தையை அழைத்து வந்தனர். உடன் அந்த குழந் தையை ஆம்புலன்ஸ் மூலம் கடலூர் அரசு மருத்துவமனைக்கு கலெக்டர் அனுப்பி வைத்தார். பின்னர் வீடுகளில் ரசாயன பொருட் களை குழந்தைகளுக்கு எட்டாத உயரத்தில் வைக் குமாறு அறிவுறுத்தினார். பின்னர் ஆரம்ப சுகாதார நிலையத்தில் நோயாளிகள் வருகை பதிவேட்டை ஆய்வு செய்ததில், பச்சை மணிலாவை சாப்பிட்டு பாதிக்கப்பட்ட குழந்தைகள் அதிக அளவில் சிகிச்சை பெற்றுள்ளனர். தற்போது மாவட்டத்தில் மணிலா அறுவடை சீசன் துவங்கியுள்ளது.

கோடை வெயிலில் உடலுக்கு மிகுந்த உஷ்ணம் மற்றும் அஜீரண கோளாறு உண்டாக்கக் கூடிய வாய்ப்பு உள்ளது. எனவே, குழந்தைகளுக்கு பச்சை வேர்க்கடலை அதிகமாக கொடுக்க வேண்டாம் என அறிவுறுத்தினார்.

**தீவனப்பற்றாக்குறையால் பாதிப்பு : கால்நடைகளை பாதுகாக்க யோசனை**

நத்தம் : தீவனப்பற்றாக்குறையிலிருந்து கால்நடைகளை பாதுகாப்பதற்கான வழி முறைகளை மாவட்ட கால்நடை நோய்புலனாய்வு உதவி இயக்குநர் ராஜேந்திரன் தெரிவித்துள்ளார்.

அவர் தெரிவித்ததாவது: அந்தந்த காலங்களில் கிடைக்கக் கூடிய வேளாண் விளைச்சலில் உட்பொருட்களைத் தீவனமாக தரலாம். அரிசித்தவிடு,அரிசிக்குருணை, பயறு, கடலைப்பொட்டு போன்றவற்றை கால்நடை தீவனத்தில் 50 சதவீதம் சேர்ப்பதால் தீவனச் செலவு மிச்சமாவதுடன் சத்துள்ள ஆகாரமும் கிடைக்கிறது. கிழங்குதிப்பி, பருத்திக் கொட்டை, தோல்நீக்கப் பட்ட புளியங்கொட்டை போன்ற பொருட்களையும் தீவனமாக பயன்படுத் தலாம். கூளத்தீவனங்களை 4 சதவீத யூரியா தெளித்து பதப்படுத்தி வைப்பதன் மூலம் சத்துள்ள தீவனம் கிடைக்கும். கரும்புத்தோகையை சைலேஜ் முறையில் தயார்செய்து தினசரி 20 முதல் 25 கிலோ வரை கொடுக்கலாம். விதை நீக்கிய சூரிய காந்திப்பூ, சூரிய காந்திச்செடி இவற் றை சிறுசிறு துண்டுகளாக வெட்டிக்கொடுப்பது செலவைக் குறைக்கும். மர இலைகளை திடீரென்று தீவனத்தில் அதிகளவு சேர்க்க கூடாது. சிறிதுசிறிதாக அதிகரிக்க வேண்டும். கால்நடைகளுக்கு வழங்கப்படும் தீவனங்களை ஒரே நேரத்தில் கொடுக்காமல் இரண்டு அல்லது மூன்று முறை பிரித்துக் கொடுப்பதால் பயனளிக்கும். இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.

**கால்நடை நோய் ஆய்வு முகாம்**

திண்டுக்கல் : செந்துறை, நல்லபிச்சம் பட்டி பகுதியில், சில நாட்களாக கால்நடைகள் மர்ம நோய் தாக்குதலால் இறப்பதாக புகார் எழுந்தது.

மாவட்ட கால்நடை நோய் புலனாய்வு உதவி இயக்குநர் ராஜேந்திரன் தலைமையில், சம்பந்தப் பட்ட பகுதிகளில் நோய் ஆய்வுப்பணி முகாம் நடத்தப்பட்டது. டாக்டர் மாரிமுத்து பாதிப்படைந்த கால்நடைகளில் இருந்து மாதிரிகள் சேகரித்தார். கால்நடைகள் நோய் பாதிப்பால் இறக்கவில்லை என தெரியவந்தது. மேலும் ஊட்டச் சத்து மிக்க தீவனங்களை வழங்குதல், கால்நடை மருந்தகங்களை பயன்படுத்திக் கொள்வது குறித்து ஆலோசனை வழங்கப் பட்டது.

**வெங்காயம் விலை குறைவு**

பழநி : பழநி உழவர்சந்தையில் உருளைக்கிழங்கு,வெங்காயம் கடந்த வாரம் கிலோ ரூ.12க்கு விற்றது. நேற்று இவைகள் கிலோ ரூ. 8க்கு விற்றது.

பிற காய்கறிகளின் விலை விபரம் வருமாறு: (ரூ. ஒரு கிலோ) கத்தரி-ரூ.7, வெண்டை-ரூ.16, தக்காளி-ரூ.3, மிளகாய்-ரூ.16, புடலை-ரூ.14, அவரை-ரூ.18, கொத்தவரை-ரூ. 8, சுரை-ரூ.4, பீர்க்கை-ரூ.12, பாகற்காய்-ரூ.13, முள்ளங்கி-ரூ.6, பூசணி-ரூ.6, புதினா-ரூ.24, பெல் லாரி-ரூ12, முருங்கை-ரூ.6, கீரை-ரூ.6, பீட்ரூட்-ரூ.8, காலிபிளவர்-ரூ.4, தேங் காய்-ரூ.4, கருணை-ரூ.28, கேரட்-ரூ.20, பூண்டு-ரூ.60.

**கறவை மாடுகளுக்கு காப்பீடு திட்டம்**

கொடைக்கானல் : கால் நடை அபிவிருத்தி முகமை மூலம் கறவை மாடுகளுக்கான காப்பீடு திட்டம் அறிமுகப்படுத்தப் பட்டுள்ளது.

இதன்படி இரண்டரை முதல் 8 வயது வரை உள்ள கறவை மாடுகளுக்கு, இத்திட்டம் பொருந் தும். தனிநபர் ஒருவர் 20 மாடுகள் வரை காப்பீடு செய்து கொள்ளலாம். காப்பீடு திட்டத்தின் காலம் ஒரு வருடமாகும். ஒவ்வொரு ஆண்டும் புதுப்பித்துக் கொள்ள வேண்டும். பயனாளிகள் அந்தந்த தாலுகாவில் உள்ள கால் நடைமருத்துவரை அணுகி தகவல் பெறலாம்

**சித்திரையை வரவேற்க பூத்து குலுங்கும் கொன்றை பூக்கள்**

நாகர்கோவில் : ஆண்டுக்கு ஒரு முறை மட்டுமே மலரும் அற்புத மலரான கொன்றை மலர்கள் தற்போது பூத்து குலுங்கி குமரி மாவட்ட மக்களை பரவசப்படுத்தி வருகிறது.

ஆபூர்வ மரங்கள், பூக்கள் என அனைத்திலும் முன்னிலை பெற்ற குமரி மாவட்டத்தில் ஆண்டுக்கு ஒரு முறை பூக்கும் அற்புத மலரான கொன்றை மலர்கள் தற்போது மாவட்டத்தில் சில பகுதிகளில் பூத்து குலுங்குகிறது.
கொன்றை என்றும் கொன்னை என்றும் வர்ணிக்கப்படும் இம்மரங்கள் மாவட்டத்தில் பல்வேறு பகுதிகளில் காணப்படுகிறது. குமரி மாவட்டத்தில் சுசீந்திரம் பகுதியில் காணப்பட்ட இம்மரம் பிரபலமானது. சுசீந்திரம் தாணுமாலைய கோயிலில் தல விருட்சமாக இந்த மரம் கூறப்படுகிறது. சிவன், பிரம்மா, விஷ்ணு மூவரும் சேர்ந்து தேவேந்திரனுக்கு இங்குள்ள கொன்றை மரத்தில் காட்சி அளித்ததாக ஐதீகம். இவ்வாறு பிரசித்திபெற்ற இம்மரம் குமரி மாவட்டத்தில் பல்வேறு பகுதிகளில் காணப்படுகிறது. நாகர்கோவில் நாகராஜாகோயில் உள்ளிட்ட பல்வேறு பகுதிகளில் இம்மரம் காணப்படுகிறது.
ஆண்டுக்கு ஒரு முறை பூத்து குலுங்கும் இம்மரம் மஞ்சள் நிறத்தில் பூக்கள் கொத்து கொத்தாக பூத்து குலுங்கும் அழகு தனி தான். இந்த பூக்கள் கன்னியாகுமரி மாவட்டம், மற்றும் கேரளா மாநிலத்தில் சித்திரை மாதம் முதல் தேதியன்று கணிகாணும் நிகழ்ச்சியில் இடம் பெறும் என்பது குறிப்பிடத்தக்கது. மாவட்டத்தில் பல்வேறு பகுதிகளில் இந்த கொன்றை மரங்கள் பூத்து குலுங்கி, பார்ப்பவர்களுக்கு கண்கொள்ளாகாட்சி அளித்து வருகிறது.

**பாழடைந்து பயனற்றுக் கிடக்கும் கால்நடை தீவன உற்பத்தி மையம் : மறுவாழ்வு எப்போது**

திருமங்கலம் : திருமங்கலம் கப்பலூர் தொழிற் பேட்டையில் செயல்பட்டு வந்த மதுரை ஆவினுக்கு சொந்தமான கால்நடை தீவனம் தயாரிப்பு தொழிற்சாலை தற்போது யாருக்கும் பயனின்றி மூடி கிடக்கிறது.
இங்கு 1991ம் ஆண்டு, கூட்டுறவு சங்கங்களுக்கு மானிய விலையில் தீவனங்கள் வழங்க தேசிய பால்வள வளர்ச்சிக்கழகத்தின் முயற்சியில் 7 கோடி மதிப்பீட்டில் கால்நடை தீவன தொழிற் சாலை தொடங்கப்பட்டது. தினமும் 100க்கும் மேற்பட்ட ஒப்பந்த தொழிலாளர்கள் 3 ஷிப்டுகளில் பணியாற்றி வந்தனர். நல்ல முறையில் லாபம் ஈட்டி வந்தது. இந்நிலையில் தீவன தயாரிப்பிற்கான மூலப் பொருட்கள் விலை உயர்வு, வேலையாட்கள் பற்றாக்குறை, நிர்வாக சீர்கேடு உள்ளிட்ட பல் வேறு காரணங்களால் இந்த தொழிற்சாலை நஷ்டத்தில் இயங்கத் தொடங்கியது. இதையடுத்து 2003ம் ஆண்டு இந்த தொழிற்சாலையை மதுரை ஆவின் அதிகாரிகள் மூடிவிட்டனர். இதில் பணியாற்றிய நிரந்தர தொழிலாளர்கள், மதுரை பால் உற்பத்தி மையத்திற்கு மாற்றப்பட்டனர். இந்த தொழிற்சாலையில் உள்ள விலை உயர்ந்த இயந்திரங்கள், தளவாடப் பொருட்கள் தற்போது துரு பிடித்து பயன்படுத்த முடியாத சூழ்நிலையில் உள்ளன. மேலும் கட்டடங்கள் கட்டப்பட்டு மிக குறைந்த வருடங்களிலேயே அவை சேதமடைந்துள்ளன.
தற்போது மதுரை மாவட்ட பால் உற்பத்தி கூட்டுறவு சங்கங்களுக்கு தேவையான தீவனங்கள் ஈரோடு மாவட்டத்தில் இருந்து பெறப்படுகிறது. இதனால் கூடுதல் செலவு ஏற்படுகிறது. இந்த கட்டடங்கள் மற்றும் இயந்திரங்களை சீரமைத்து தொழிற்சாலையை இயக்கி, பால் உற்பத்தியை பெருக்குவதற்கு அதிகாரிகள் நடவடிக்கை எடுக்க வேண்டும். மையத்தை திறக்க வேண்டும் என நன்மாறன் எம்.எல்.ஏ., முதல்வர் கருணாநிதிக்கு மனு அனுப்பியுள்ளார்.

**விவசாய சங்க மாநாடு**

சோழவந்தான் : சோழவந்தானில் இந்திய கம்யூ., தமிழ்நாடு விவசாய சங்கபேரவையின் மதுரை மாவட்ட மாநாடு நடந்தது.
பேரவை செயலாளர் சிவக்குமார் தலைமை வகித்தார். மாநாட்டுசெயலாளர் சுப்பிரமணியம் முன்னிலை வகித்தார். மாவட்ட விவசாய சங்க செயலாளர் ஜோதிராமலிங்கம் வரவேற்றார். மாநில தலைவர் குணசேகரன் எம்.எல்.ஏ.,

செயற்குழு உறுப்பினர் சேதுராமன், மாவட்ட செயலாளர்கள் ஜெயக் கொடி மற்றும் பலர் பங்கேற்றனர். நிர்வாகி பரமசிவம் நன்றிகூறினார்.

**மலர் சாகுபடி விவசாயிகளுக்கு ரூ.54 ஆயிரம் மானியம்**

ஊட்டி : பசுமைக் குடில் அமைத்து மலர் சாகுபடி மேற்கொள்ளும் விவசாயிகள் 23 பேருக்கு, ரூ.54 ஆயிரம் மானியத் தொகை வழங்கப்பட்டது. நீலகிரி மாவட்ட கலெக்டர் அலுவலக வளாகத்தில், மக்கள் குறை தீர்க்கும் நாள் கூட்டம் நடந்தது.மக்களிடம் இருந்து மனுக்களை பெற்ற கலெக்டர், உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும் என துறை அதிகாரிகளுக்கு உத்தரவிட்டார்.

கூக்கல்தொரை அரசு பிற்படுத்தப்பட்டோர் நலத்துறை மாணவர் விடுதியில், காப்பாளராக பணிபுரிந்த லிங்கன், பணியின் போது இறந்ததால், குடும்ப நலநிதி ஒரு லட்சத்து 45 ஆயிரத்துக்கான காசோலையை, லிங்கனின் மனைவி அல்லிராணியிடம், கலெக்டர் வழங்கினார்.தோட்டக்கலை துறை சார்பில், 2009-'10ம் ஆண்டில், தேசிய தோட்டக்கலை திட்டத்தின் கீழ் உயர் தொழிற்நுட்ப பசுமைக் குடில் அமைத்து, மலர் சாகுபடி மேற் கொள்ளும் விவசாயிகளுக்கு மானியம் வழங்கப்பட்டு வரும் நிலையில், 23 விவசாயி களுக்கு 17 ஆயிரம் சதுர மீட்டர் பரப்பிலான பசுமைக் குடில்களுக்கு, 54 ஆயிரம் மதிப்பில் மானியத் தொகை வழங்கினார். மாவட்ட வருவாய் அலுவலர் குப்புசாமி, மாவட்ட பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையோர் நல அலுவலர் குணாலன், தோட்டக்கலைத் துறை இணை இயக்குனர் இஸ்ரவேல், தனித்துணை கலெக்டர் (இலவச கலர் 'டிவி') வெங்கடாசலம், அனைத்து துறை அலுவலர்கள் பங்கேற்றனர்.

**புதுகையில் தோட்டக்கலைத்துறை சார்பில் நீர்வள நிலவள நாள் விழா**

புதுக்கோட்டை: புதுகை தோட்டக்கலைத்துறை சார்பில் நீர்வள நிலவளத்திட்ட பயிற்சி மற்றும் நீர்வளநிலவள நாள் விழா நடந்தது. பயிர்சாகுபடி நுட்பங்களை விவசாயிகளுக்கு எடுத்துக்கூறும் விதமாக பெருங்களூர் கிராமியா தன்னார்வ நிறுவனம் 25 விவசாயிகளுக்கு பயிற்சி அளித்தது. இந்த திட்டத்தில் அரசு வழங்கும் மானியம் குறித்து தோட்டக்கலை அலுவலர்கள் மகாலிங்கம், செல்வம் ஆகியோர் பேசினர். பழமர சாகுபடியில் பின்பற்ற வேண்டிய தொழில்நுட்பங்கள் குறித்து தோட்டக்கலைத்துறை அலுவலர் கணேசன் விளக்கினார். காய்கறி சாகுபடியில் கடைப்பிடிக்க வேண்டிய தொழில் நுட்பங்கள் குறித்து தோட்டக்கலை உதவி இயக்குனர் பாலசுப்ரமணியன் விளக்கினார். பழமரங்கள், காய்கறிகள் பயிர் பாதுகாப்பு முறைகள் குறித்து தொழில் நுட்ப ஆலோசகர் தேவகி விவசாயிகளின் சந்தேகங்களுக்கு பதில் அளித்தார். இதே போன்று அக்னியாற்று உபவடி நிலப்பகுதியில் அமைந்துள்ள வாகவாசல் கிராமத்தில் நடந்த நீர்வளநிலவள நாள் நிகழ்ச்சியில் மானிய உதவிகள் குறித்து தோட்டக்கலைத்துறை உதவி அலுவலர் செல்வம் பேசினார். பழமர சாகுபடி குறித்து அலுவலர் கணேசன், காய்கறி சாகுபடி குறித்து உதவி இயக்குனர் பாலசுப்ரமணியன் ஆகியோர் பேசினர். உதவி தோட்டக்கலைத்துறை அலுவலர் மகாலிங்கம் வரவேற்றார்.

**தோட்டக்கலை சாகுபடிக்கு 50% மானியம் புதுக்கோட்டை உதவி இயக்குனர் தகவல்**

புதுக்கோட்டை: புதுக்கோட்டை மாவட்டத்தில் தோட்டக்கலைப் பயிர் சாகுபடிக்கு தேவையான பழமரக் கன்றுகள், காய்கறி விதைகள் மற்றும் மண்புழு உரம், ரசாயன உரம் போன்றவற்றை 50 சதவீத மானிய விலையில் வழங்க தோட்டக்கலைத் துறை தயாராக உள்ளது. இதுகுறித்து தோட்டக்கலைத்துறை உதவி இயக்குனர் பாலசுப்பிரமணியன் வெளியிட்ட அறிக்கை: புதுக்கோட்டை மாவட்டத்தில் விவசாயிகளின் ஒட்டுமொத்த முன்னேற்றத்துக்காக உலக வங்கி நிதி உதவியுடன் நீர்வள, நிலவளத் திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இத்திட்டத்தின் கீழ் தோட்டக்கலைப் பயிர் சாகுபடியை அதிகரிப்பதற்கான நடவடிக்கை முடுக்கிவிடப்பட்டுள்ளது. திசு வாழை, சவுக்கு, மா, நெல்லி, பலா,

சப்போட்டா, கொய்யா, எலுமிச்சை ஆகிய பழமரங்களின் வீரிய ஒட்டு மரக்கன்றுகள் தேவையான அளவு இருப்பு வைக்கப்பட்டுள்ளது. காய்கறிகளை பொறுத்தமட்டில் வெண்டை, கத்திரி, பூசணி, பறங்கி ஆகியவற்றின் வீரிய ஒட்டு விதைகள் தேவையான அளவு இருப்பு வைக்கப்பட்டுள்ளது. இவை அனைத்தும் 50 சதவீத மானிய விலையில் வழங்கப்படும். இதுபோன்று பயிர் சாகுபடிக்கு தேவையான மண்புழு உரம், ரசாயன உரம், பயிர் பாதுகாப்பு மருந்து, இடுபொருள் போன்றவையும் 50 சதவீத மானிய விலையில் வழங்கப்படும். தோட்டக்கலைப் பயிர் சாகுபடிக்கான நவீன தொழில்நுட்பங்கள் குறித்து விவசாயிகளுக்கு செய்முறை பயிற்சிகளும் வழங்கப்பட உள்ளது. எனவே, தோட்டக்கலை பயிர் சாகுபடி செய்ய விரும்பும் விவசாயிகள் மாவட்ட தோட்டக்கலைத்துறை உதவி இயக்குனர் அலுவலகத்தை நேரில் தொடர்புகொள்ளலாம். இவ்வாறு அவர் அறிக்கையில் குறிப்பிட்டுள்ளார்.

**கால்நடைக்காக விவசாயம் செய்யுங்கள் : அமைச்சர் வேண்டுகோள்**

ராமநாதபுரம் : "கால்நடைகளுக்காக விவசாயம் செய்ய விவசாயிகள் முன்வர வேண்டும்," என, அமைச் சர் தங்கவேலன் பேசினார்.

ராமநாதபுரத்தில் நடந்த நலத்திட்ட உதவிகள் வழங்கும் விழாவில் அவர் பேசியதாவது: கால்நடை வளர்ப்பில் நல்ல லாபம் கிடைக்கும் என்பதை விவசாயிகள் உணர வேண்டும். மானாவாரி நிலங்களில் விவசாயம் செய்து விவசாயிகள் சிரமப்படுகின்றனர். சிலர் காப்பீடு கேட்டு காலத்தை வீணடிக்கின்றனர். இதற்கு பதிலாக மானாவரி நிலங்களில் கால்நடைகளுக்கான தீவணங்களை பயிரிட்டு நல்ல லாபம் பெறலாம். கறவை மாடுகளை வளர்த்து அவற்றிக்கு நல்ல இரை தரும் பட்சத்தில் தொழில் வளம் சிறக்கும்.

மகளிர் குழுக்கள் என்றால் வழக்கமான கூடை பின்னுதல் போன்ற தொழிலை தான் செய்ய வேண்டும் என்பதல்ல. தான் சார்ந்திருக்கும் பகுதிக்கு ஒத்துடைய தொழிலை மேற்கொள்ள வேண்டும். இதன் மூலம் கிராமங்களின் பொருளாதாரம் உயரும், என்றார்.

கலெக்டர் ஹரிஹரன், பாலசுப்பிரமணியன் டி.ஆர்.ஓ., ஹசன்அலி எம்.எல்.ஏ., ஊராட்சி ஒன்றியக்குழு தலைவர் ரவிச்சந்திரராமவன்னி உட்பட பலரும் பங்கேற்றனர்.

**டிபாஸிட் செலுத்த வியாபாரிகளுக்கு அழைப்பு மேட்டூர் அணை மீன்கள் விலை உயர வாய்ப்பு**

மேட்டூர்: மேட்டூர் அணை மீன்களை மொத்த கொள்முதல் செய்யும் வியாபாரிகள் டிபாஸிட் செலுத்த கூட்டுறவு சங்கம் அழைப்பு விடுத்துள்ளது. வியாபாரிகள் டிபாஸிட் தொகை செலுத்தும் பட்சத்தில் மேட்டூர் அணை மீன்கள் விலை உயரும் நிலை ஏற்பட்டுள்ளது.

மேட்டூர் அணை 152 சதுர கி.மீ., நீர்பரப்பு பகுதியை கொண்டது. அணையில் கட்லா, ரோகு, மிர்கால் ஆகிய முதல்ரக மீன்கள், கல்பாஸ், எட்டரை பிளஸ், சொட்டவாலை போன்ற இரண்டாம் ரக மீன்கள், சோனா கெளுத்தி, 200 கி., கல்பாஸ் ஆகிய மூன்றாம் ரக மீன்கள், நான்காம் ரக மீன்களாக திலேப்பியா ஆகியவை பிடிபடுகிறது.

அணையில் பிடிக்கும் மீன்களை மீனவர்கள் மேட்டூர் மீனவர் கூட்டுறவு சங்கத்திற்கு விற்கின்றனர். கூட்டுறவு சங்கம் பொதுமக்களுக்கு முதல்ரக மீன்களை ஒரு கிலோ 80ரூபாய்க்கும், இரண்டாம் ரக மீன்களை கிலோ 70 ரூபாய்க்கும், மூன்றாம் ரக மீன்களை கிலோ 55 ரூபாய்க்கும், நான்காம் ரகத்தை 33 ரூபாய்க்கும் விற்பனை செய்கிறது.

இன்று ஏப்.,1ம் தேதி முதல் மீனவர் சங்கம் மொத்த வியாபாரிகளுக்கும் மீன்களை விற்பனை செய்ய மீனவர்கள் கூட்டத்தில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. ஏராளமான மீன் வியாபாரிகள் கூட்டுறவு சங்கத்திடம் இருந்து மீன்களை கொள்முதல் செய்வதற்கு டெண்டர் போட்டிருந்தனர்.

---

அதன்படி முதல்ரக மீன்களை 89.10 ரூபாய்க்கும், இரண்டாம் ரக மீன்களை 86ரூபாய்க்கும், மூன்றாம் ரக மீன்களை 75ரூபாய்க்கும், நான்காம் ரக மீன்கள் 33.30ரூபாய்க்கும் கொள்முதல் செய்ய வியாபாரிகள் சம்மதம் தெரிவித்தனர். முதல்ரக மீனை கொள்முதல் செய்ய 1.75 லட்சம் ரூபாய், மற்ற மூன்று ரக மீன்களை கொள்முதல் செய்ய தலா 1.5 லட்சம் ரூபாயை வியாபாரிகள் டிபாஸிட் ஆக செலுத்த வேண்டும். இதுவரை வியாபாரிகள் யாரும் மீன்களை கொள்முதல் செய்ய டிபாஸிட் செலுத்த வில்லை. வியாபாரிகளை டிபாஸிட் செலுத்தி ஏப்.,1 (இன்று) முதல் மீன்களை கொள் முதல் செய்ய மீன்துறை அழைப்பு விடுத்துள்ளது. நான்கு ரக மீன்கள் குறித்த விலையில் கொள்முதல் செய்ய வியாபாரிகள் டெபாஸிட் செலுத்தி விட்டால் தற்போது கிலோ 80ரூபாய்க்கு விற்கும் கட்லா, ரோகு ஆகிய முதல் ரக மீன்கள் 90 ரூபாய் ஆகவும், 70 ரூபாய் ஆக உள்ள இரண்டாம் ரக மீன்கள் 86 ரூபாய் ஆகவும், 55 ரூபாய் ஆக உள்ள மூன்றாம் ரக மீன்கள் 75 ரூபாய் ஆகவும் அதிகரிக்க வாய்ப்பு உள்ளது.

**வேளாண் சார்ந்த தொழில் களுக்காக ரூ.1,466 கோடி கடனுதவி : தஞ்சை மாவட்ட வங்கிகள் வழங்க இலக்கு**

தஞ்சாவூர் : தஞ்சை மாவட்டத்தில் நடப்பு ஆண்டில் வேளாண் மற்றும் வேளாண் சார்ந்த தொழில் களுக்காக ரூ.1022 கோடி உட்பட மொத்தம் 1,466 கோடியில் கடனுதவி வழங்க இலக்கு நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது என்று மத்திய அமைச்சர் பழனிமாணிக்கம் கூறினார்.

தஞ்சையில் வங்கியாளர்கள் ஆய்வு கூட்டம் நடந்தது. கலெக்டர்(பொ) கருணாகரன் வரவேற்றார். மத்திய அமைச்சர் பழனிமாணிக்கம் நடப்பு ஆண்டிற்கான கடன் திட்ட அறிக்கையை வெளியிட்டு பேசியதவாது: வரும் ஆண்டுக்கான கடன் திட்டத்தில் கடந்த ஆண்டை விட 15.69 சதவீதம் கூடுதலாக, பல்வேறு திட்டங்களில் கடன் வழங்க ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இதன் படி 2010-2011ம் ஆண்டில் ரூபாய் ஆயிரத்து 465 கோடியே 91 லட்சம் மதிப்பில் கடன் வழங்க இலக்கு நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது. இது கடந்த ஆண்டைவிட ரூபாய் 198 கோடியே 77 லட்சம் கூடுதல் ஆகும். புதிய கடன் திட்ட அறிக்கையில் வேளாண்மை மற்றும் அதைச் சார்ந்த பணிகளுக்கு ரூபாய் ஆயிரத்து 22 கோடியே 17 லட்சமும், பிற தொழில்களுக்கு ரூபாய் 142 கோடியும், கல்வி கடன் மற்றும் வீட்டு வசதிக் கடன் ஆகியவைகளுக்கு ரூபாய் 301 கோடிய 73 லட்சமும் வழங்கப்படவுள்ளது.

மகளிர் சுய உதவிக்குழுக்களுக்கு ரூபாய் 94 கோடி வழங்க திட்டமிடப்பட்டுள்ளது. இந்த கடன் திட்ட அறிக்கைப்படி வரும் ஆண்டில் அரசின் அனைத்து திட்டங்களுக்கும் வங்கியாளர்கள் உடனடியாக உதவிகள் வழங்க வேண்டும். குறிப்பாக மகளிர் சுய உதவிக் குழுக்கள் வாங்கும் கடனை 90 சதவீதம் குறித்த காலத்தில் திருப்பி செலுத்தி விடுகின்றனர். வரும் ஆண்டில் புதிய மகளிர் சுய உதவிக்குழுக்கள் அமைக்கப்படும். 1400 குழுக்களுக்கு உடனடியாக வங்கி கணக்குகளை தொடங்குவதுடன் 6 மாத காலத்திற்குள் சுழல்நிதி மற்றும் பொருளாதார கடன் உதவிகளை வழங்கி தேசிய அளவில் விருது பெற வைக்க வேண்டும்.மாற்று திறனாளிகள் வளர்ச்சியை மேம்படுத்த தனித்துறையை முதல்வர் கருணாநிதி தொடங்கியுள்ளார். எனவே அனைத்து வங்கியாளர்களும் மாற்று திறனாளிகளின் திறமையை வெளியில் கொண்டு வரும் வகையில் அவர்களுக்கான கடன் உதவிகளை தாமதம் இன்றி வழங்க வேண்டும்.கல்விக் கடன் வழங்குவதில் தொடர்ந்து நிபந்தனைகளை குறைத்து காலதாமதம் இன்றி கடன் வழங்க வேண்டும். அதிகளவு விவசாயிகள் உள்ள இந்த மாவட்டத்தில் உணவு உற்பத்தியை பெருக்கும் வகையில் வங்கியாளர்களும், அரசு அலுவலர்களும் பணியாற்ற வேண்டும். இவ்வாறு மத்திய அமைச்சர் பேசினார்.

எம்.எல்.ஏக்கள் துரைசந்திரசேகரன், மகேஷ்கிருஷ்ணசாமி, இந்தியன் ஓவர்சீஸ் வங்கி முதுநிலை மண்டல மேலாளர் கிருஷ்ணபிரசாத், ரிசர்வ் வங்கி உதவி பொது மேலாளர் ஞானவேல், திட்ட அலுவலர் கலைவாணன், தாட்கோ மாவட்ட மேலாளர் சண்முகசுந்தரம் மற்றும் பலர் கலந்து கொண்டனர். முன்னோடி வங்கி மேலாளர் வெற்றிச்செல்வன் நன்றி கூறினார்.

**கேரளாவில் மழை பெய்தாலும் ஏலக்காய் விலை குறையவில்லை**

தேவாரம் : ஏலக்காய் வெளிநாடுகளுக்கு ஏற்றுமதிக்கான ஆர்டர் கணிசமாக இருப்பதால் இடுக்கி மாவட்டத்தில் மழை பெய்தபோதும் விலை குறையவில்லை.
கேரள மாநிலம், இடுக்கி மாவட்டத்தில் கட்டப்பனை, ராஜாக்காடு, ராஜகுமாரி பகுதியில் சென்ற வாரத்தில் மழை பெய்ததால் ஏலக்காய் விலை கிலோவிற்கு 50 ரூபாய் வரை குறைந்தது. இதனால் நடப்பு ஏலக்காய் விலை கிலோவிற்கு ஆயிரம் ரூபாய் முதல் 1020 ஆனது. மற்ற பகுதியில் மழை பெய்யாததாலும், ஏற்றுமதிக்கான ஆர்டர்கள் கணிசமாக இருப்பதாலும் விலை படிப்படியாக அதிகரித்தது.
தற்போது நடப்பு ரகம் ஆயிரத்து 50 ரூபாய் முதல் 1070 ரூபாயாக உள்ளது. ஏலப்பழம் எடுப்பு குறைந்ததால் மத்திய அரசு ஏல வர்த்தக மையமான எஸ்.டி.சி.எல்., தனது வர்த்தகத்தை அடுத்த மூன்று மாதங்களுக்கு நிறுத்தி வைத்துள்ளது. பெரிய ஏல வர்த்தக மையங்களான கே.சி.பி.எம்.சி., சி.பி.எம்.சி., ஹெட்டர், எஸ்.ஐ.சி.சி., யில் கடந்த வாரத்தில் 40 முதல் 45 டன் வரை ஏலக்காய் விற்பனைக்காக பதிவு செய்யப்பட்டது. மற்ற நிறுவனங்களான சி.பி.ஏ., ஐ.சி.எம்.சி., மாஸ்., ஆகியவற்றில் 20 டன் வரை பதிவு செய்யப்பட்டு விற்பனையானது.
ஏற்றுமதிக்கான ஆர்டர் உள்ளதால் 7.5 எம்.எம்., ரகம் ஆயிரத்து 150 ரூபாய் முதல் 1200 ரூபாய்க்கு விற்பனையாகிறது. ஏலப் பழமெடுப்பு சீசன் முடிவடைந்துள்ளதால் விலை கூடுவதற்கு வாய்ப்புள்ளதாக மொத்த வியாபாரிகள் தெரிவித்தனர்.

**சொட்டு நீர் பாசனம் குறித்த விழிப்புணர்வு விவசாயிகளிடம் போதிய அளவு இல்லை : தோட்டக்கலை அதிகாரி 'ஆதங்கம்'**

அரக்கோணம்:சொட்டு நீர் பாசனம் குறித்து விவசாயிகளிடம் போதிய விழிப்புணர்வு இல்லை என தோட்டக்கலை அதிகாரி ஜெபக்குமாரி கூறினார்.அரக்கோணம் அடுத்த காவனூர் பஞ்.,சில் தோட்டக்கலை துறை சார்பில் நீர்வள, நிலவள திட்டம் ஏரிபாசன விவசாயிகளுக்கு இடுபொருள் இலவசமாக வழங்கும் விழா நடந்தது.

ஏரிபாசன தலைவர் வாசுதேவன் தலைமை வகித்தார். ஏரிபாசன உறுப்பினர்கள் நாக பூஷணம், மணி ஆகியோர் முன்னிலை வகித்தனர். ஏரிபாசன தலைவர் விஜயகுமார் வரவேற்றார்.நிகழ்ச்சியில் காவேரிப்பாக்கம் தோட்டக்கலை உதவி இயக்குனர் பரசுராமன் பேசியதாவது: எந்த ஒரு பயிராக இருந்தாலும் குறிப்பிட்ட காலத்திலேயே பயிர் செய்ய வேண்டுமென விவசாயிகள் நினைக்கின்றனர். இந்த எண்ணத்தை மாற்றிக்கொள்ள வேண்டும்.

ஏனெனில் எல்லோரும் ஒரே நேரத்தில் குறிப்பிட்ட பயிரை விவசாயம் செய்வதால் விளைச்சல் அதிகமாகும் நேரங்களில், மார்க்கெட்டில் விலை குறைந்துவிடும். இதனால் போதிய விலை கிடைக்காமல் அவதிப்படும் நிலை ஏற்படுகிறது.தக்காளி, வெண்டை, கத்தரி போன்ற பயிர்களை குறிப்பிட்ட நாட்கள் தள்ளி பயிர் செய்தால் மார்க்கெட்டில் வரத்து குறைவாக இருக்கும் நேரங்களில் நல்ல விலை கிடைக்கும். மார்க்கெட்டில் எல்லா காய்கறிகளும் எல்லா நாட்களும் கிடைக்கும்.

குறிப்பிட்ட மாதங்களில் மட்டுமே குறிப்பிட்ட காய்கறிகள் கிடைக்கும் என்ற நிலை மாறும். விவசாயிகள் கொஞ்சம் புத்திசாலிதனத்தை உபயோகப்படுத்தி, 'பிளான்' செய்து விவசாயம் செய்தால் நல்ல லாபம் கிடைக்கும்.இவ்வாறு அவர் பேசினார்.

தோட்டக்கலை உதவி இயக்குனர் (பொறுப்பு) அரக்கோணம் ஜெபக்குமாரி பேசியதாவது: விவசாயிகளிடையே சொட்டு நீர் பாசனம் குறித்து போதிய விழிப்புணர்வு இல்லை. இந்த முறையை பின்பற்றினால் தோட்டத்தில் களையெடுக்க

வேண்டிய வேலை அதிகளவில் இருக்காது. ஏனெனில் சொட்டு நீர் பாசனம் குறிப்பிட்ட இடத்தில் மட்டுமே பாயும். இதனால் புற்கள் குறைந்தளவே வளரும்.இவ்வாறு அவர் பேசினார்.

பெண் விவசாயி விஜயா என்பவர் பேசியதாவது:இலவசமாக இடுபொருட்கள் தருவதாக அதிகாரிகள்சொல்கிறீர்கள். ஆனால் இதை வாங்குவதற்கு பலசான்றிதழ்கள் கேட்கின்றனர். அதை பெறஅலைய வேண்டியிருக்கிறது. அப்படியே பெற்று தந்தாலும் தோட்டக்கலை துறையினர் குறிப்பிட்ட காலத்தில் இடுபொருட்கள் வழங்குவது இல்லை.

100 நாள் வேலை திட்டத்துக்கு கூலியாட்கள் சென்று விடுவதால் விவசாயத்துக்கு ஆட்கள் கிடைப்பதில்லை' என்று பேசினார்.இதை தொடர்ந்து காவனூர் பஞ்., தலைவர் சரவணன் ,விவசாயிகளுக்கு இடுபொருட்கள் வழங்கி பேசினார்.

இதில், தோட்டக்கலை உதவி இயக்குனர் விஜயராம், தோட்டக்கலை உதவி அலுவலர்கள் ஜீவானந்தம், செந்தில்குமார், சக்திவேல் ஆகியோர் கலந்து கொண்டனர். நரசிங்கபுரம் பெற்றோர் ஆசிரியர் கழக தலைவர் மணி நன்றி கூறினார்.

**பட்டு வளர்ச்சித் துறை ஆறு வகை உபகரணங்கள் கலெக்டர் வழங்கல்**

விழுப்புரம் : பட்டு வளர்ச்சி துறை சார்பில் ஆறு வகையான உபகரணங்களை 4.50 லட் சம் ரூபாய் மதிப்பீட்டில் 15 நபர்களுக்கு கலெக்டர் பழனிசாமி வழங்கினார்.
பட்டு வளர்ச்சி துறை சார்பில் பட்டு புழு வளர்ப் பில் ஈடுபட்டுள்ளவர் களை ஊக்குவிக்க தமிழக அரசால் கடனுதவி, மானிய விலையில் உபகரணங்கள் வழங்கப்படுகிறது. விழுப்புரம் மாவட் டத்தில் இந்த நிதியாண்டிற்கு பட்டு வளர்ச்சி துறையில் செயல்படுத்தப்படும் கிரியா ஊக்கி திட்டத்தின் கீழ் ஒரு பயனாளிக்கு 30 ஆயிரம் ரூபாய் வீதம் 15 பயனாளிகளுக்கு 4.50 லட் சம் ரூபாய் மதிப்பிலான இலவச புழு வளர்ப்பு தளவாடங்கள் வழங்க அரசு உத்தரவிட்டுள்ளது.
அதனடிப்படையில் விழுப்புரம் கலெக்டர் அலுவலகத்தில் பயனாளிகளுக்கு ஒரு ஈரப்பதமானி, 190 சந்திரிக்கைகள், 30 பட்டு கூடுகட்டும் வலை, 50 மீட்டர் புழு வளர்ப்பு படுக்கை வலை, 5 பிளாஸ் டிக் தட்டுகள் மற்றும் ஒரு விசைத்தெளிப்பானை கலெக்டர் பழனிசாமி வழங்கினார்.
டி.ஆர்.ஓ., கதிரவன், பட்டுவளர்ச்சி துறை உதவி இயக்குனர் சவுந்தரபாண்டியன், தொழில் நுட்ப உதவியாளர் தட்சணாமூர்த்தி, உதவி ஆய் வாளர் அசோகன் மற்றும் இளநிலை ஆய்வாளர்கள் கார்த்திகேயன், சதாசிவம், மருதமுத்து, எழிலன், சதாசிவம் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

---

தினத் தந்தி DAILY THANTHI வெல்க தமிழ்

## *பயன்பாடு 6.8 சதவீதம் உயர்வு*

## *ரப்பர் விலை அதிகரித்துள்ளதால் டயர் நிறுவனங்களுக்கு பாதிப்பு*

இக்கனாமிக் டைம்ஸ் செய்தி பிரிவு
கொச்சி
*ரப்பர் பயன்பாடு அதிகரித்துள்ள நிலையில், உற்பத்தி குறைந்துள்ளது. எனவே, இயற்கை ரப்பர் விலை வரலாறு காணாத அளவில் அதிகரித்துள்ளது. இதனையடுத்து, டயர் தயாரிப்பு நிறுவனங்கள் கவலை அடைந்துள்ளன.*
வாகனங்கள் விற்பனை
*நடப்பு ஆண்டு பிப்ரவரி மாதத்தில் கார்கள், இரு சக்கர வாகனங்கள் உள்ளிட்ட* மோட்டார் வாகனங்கள் விற்பனையில் வரலாறு காணாத எழுச்சி ஏற்பட்டுள்ளது. இதனால், டயர்கள் விற்பனை அதிகரித்து, இயற்கை ரப்பருக்கான தேவைப்பாடு அதிகரித்துள்ளது.
*நடப்பு ஆண்டு மார்ச் மாதத்தில், சென்ற ஆண்டின் இதே மாதத்தைக் காட்டிலும் ரப்பர் விலை 10 சதவீதம் அதிகரித்து, ஒரு கிலோ ரூ.156.50–ஆக உயர்ந்துள்ளது.*
உற்பத்தி
*நடப்பு 2009–10–ஆம் ஆண்டு ரப்பர் பருவத்தில் (அக்டோபர் – செப்டம்பர்) இயற்கை ரப்பர் உற்பத்தி, சென்ற பருவத்தைக் காட்டிலும் 4 சதவீதம் சரிவடைந்து 8.30 லட்சம் டன்னாக குறையும் என மதிப்பிடப்பட்டுள்ளது. அதேசமயம், பயன்பாடு 6.8 சதவீதம் அதிகரித்து 9.31 லட்சம் டன்னாக உயரும் என எதிர்பார்க்கப்படுகிறது.*
*எனினும், வரும் 2010–11–ஆம் பருவத்தில், உற்பத்தி 7.6 சதவீதம் அதிகரித்து 8.93 லட்சம் டன்னாக வளர்ச்சி அடையும் என கணிக்கப்பட்டுள்ளது. இதே காலத்தில், பயன்பாடு 5 சதவீதம் அதிகரித்து 9.78 லட்சம் டன்னாக உயரும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. ஆக, இயற்கை ரப்பர் பயன்பாடு உற்பத்தியை காட்டிலும் அதிகமாக உள்ளது. இதனால்தான் இதன் விலை மிகவும் உயர்ந்து வருகிறது.*
*நடப்பு ரப்பர் பருவத்தில், இதுவரையில், வெளிநாடுகளிலிருந்து 1.67 லட்சம் டன் ரப்பர் இறக்குமதி செய்யப்பட்டுள்ளது. வரும் 2010–11–ஆம் ஆண்டு பருவத்தில் ரப்பர் பற்றாக்குறை 1 லட்சம் டன்னாக இருக்கும் என மதிப்பீடு செய்யப்பட்டுள்ளது.*
*இந்தியாவில் மட்டுமின்றி, வெளிநாடுகளிலும் இதன் விலை உயர்ந்துள்ளது. நடப்பு ஆண்டு மார்ச் மாத தொடக்கத்தில் சர்வதேச சந்தைகளில் ரூ.151.24–ஆக இருந்த ஒரு கிலோ ரப்பர் விலை இம்மாத இறுதியில் ரூ.157.52–ஆக உயர்ந்துள்ளது.*
பாதிப்பு
*ரப்பர் விலை அதிகரித்து வருவது, இந்திய டயர் தயாரிப்பு நிறுவனங்களுக்கு பாதிப்பை ஏற்படுத்தி உள்ளது. இதனையடுத்து, நாட்டில் இயற்கை ரப்பர் தங்கு தடையின்றி கிடைக்க ஏற்பாடு செய்யும்படி மோட்டார் வாகன டயர் தயாரிப்பாளர்கள் சங்கம் பிரதம மந்திரி மன்மோகன்சிங்கிடம் கோரிக்கை விடுத்துள்ளது.*
*இயற்கை ரப்பர் மீதான முன்பேர வர்த்தகத்திற்கு தடை விதிக்க வேண்டும் என்றும், இதனை தீர்வை எதுவுமின்றி இறக்குமதி செய்ய அரசு அனுமதிக்க வேண்டும் என்றும் கேட்டுக் கொண்டுள்ளது. ரப்பர் விலை உயர்வால் பணவீக்கமும் அதிகரிக்க வாய்ப்புள்ளது என்று இச்சங்கம் தெரிவித்துள்ளது.*
*ரப்பர் உற்பத்தி தீவிரமடையும் பருவத்திலும் (2009 அக்டோபர் – 2010 பிப்ரவரி) இதன் விலை உயர்ந்துள்ளது என்று டயர் தயாரிப்பு நிறுவனத்தின் உயர் அதிகாரி ஒருவர் தெரிவித்தார். விலை மேலும் உயர வாய்ப்புள்ளது என்றும், விரைவில் ஒரு கிலோ ரப்பர் விலை ரூ.175–180–ஆக அதிகரிக்கும் என்றும் சந்தை வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.*

உள்நாட்டில் விலை அதிகரித்து வரும் நிலையில், வெளிநாடுகளிலிருந்தும் இயற்கை ரப்பரை இறக்குமதி செய்வதும் ஒரு சவாலாக உள்ளது. ஏனென்றால், இதன் இறக்குமதிக்கு 20 சதவீத தீர்வையைச் செலுத்த வேண்டும். ஆனால், இதிலிருந்து தயாரிக்கப்படும் டயர் இறக்குமதி மீதான தீர்வை 8.6 சதவீதம் என்ற அளவில் குறைவாக உள்ளது.

போட்டி

இதனால், இந்திய டயர் தயாரிப்பு நிறுவனங்களால், வெளிநாட்டு நிறுவனங்களின் போட்டியை எதிர்கொள்ள முடியவில்லை. சீனா, ஏற்கனவே இயற்கை ரப்பர் இறக்குமதி மீதான தீர்வையைக் குறைத்துள்ளது. இதனால், அந்நாட்டு டயர் தயாரிப்பு நிறுவனங்கள் பயன் பெற்றுள்ளன.

எனவே, இயற்கை ரப்பர் இறக்குமதி தீர்வையை 20 சதவீதத்திலிருந்து 7.5 சதவீதமாக குறைக்க வேண்டும் அல்லது டயர் இறக்குமதி மீதான வரியை 20 சதவீதமாக உயர்த்த வேண்டும் என டயர் தயாரிப்பாளர்கள் சங்கம் வேண்டுகோள் விடுத்துள்ளது.

## லாப நோக்கத்தில் பதுக்கல் எதிரொலி

## துவரம்பருப்பு–உளுத்தம்பருப்பு விலை திடீர் உயர்வு

## உற்பத்தி அதிகரிப்பால் சர்க்கரை விலை இறங்குமுகம்

சென்னை, ஏப்.1–

லாப நோக்கத்தில் உற்பத்தி மாநிலங்களில் அதிக அளவில் பதுக்கல் காரணமாக துவரம்பருப்பு–உளுத்தம்பருப்பு விலையில் திடீர் உயர்வும், உற்பத்தி அதிகரிப்பால் சர்க்கரை விலை தொடர்ந்து இறங்கும் முகமாகவும் உள்ளது.

துவரம்பருப்பு விலை உயர்வு

விளைச்சல் குறைவு காரணமாக கடந்த ஆண்டு மார்ச் மாதம் எந்த ஆண்டும் இல்லாத வகையில் துவரம்பருப்பு ஒரு கிலோ ரூ.100 வரை விற்பனையானது. இதன் பின்பு படிப்படியாக விலை குறைந்து கடந்த மாதம் ஒரு கிலோ துவரம்பருப்பு ரூ.60–க்கு விற்பனையானது. இந்த ஆண்டு உத்திரபிரதேசம், மத்தியபிரதேசம், குஜராத் ஆகிய மாநிலங்களில் நல்ல விளைச்சல் இருந்தும் துவரம்பருப்பு விலை உயர்ந்து வருவது வியாபாரிகளுக்கு அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

பெரிய வர்த்தக நிறுவனங்களும், மொத்த வியாபாரிகளும் அதிகமான லாபம் சம்பாதிக்க வேண்டும் என்ற நோக்கதில் துவரம்பருப்பு, உளுத்தம்பருப்பை அதிக அளவில் கொள்முதல் செய்து உற்பத்தி மாநிலங்களில் பதுக்கிவைத்துள்ளதாக கூறப்படுகிறது. இதனால் துவரம்பருப்பு, உளுத்தம்பருப்பு விலை கடந்த சில நாட்களாக உயர்ந்துவருகிறது.

இது மட்டும் அல்லாமல் தமிழக அரசு ரேஷன் கடைகளில் விற்பனை செய்வதற்காக சிவில் சப்ளை கார்ப்பரேஷன் மூலமாக இந்த மாதம் 5 ஆயிரம் டன் துவரம்பருப்பும், ஆயிரம் டன் உளுத்தம்பருப்பும் கொள்முதல் செய்துள்ளது. இதனால் துவரம்பருப்பு, உளுத்தம்பருப்பு விலை திடீர் என்று உயர்ந்துள்ளது என்று அனைத்து மளிகை

*வியாபாரிகள் சங்க தலைவர் எஸ்.பி.சொரூபன் தெரிவித்தார்.*
*சர்க்கரை விலை சரிவு*
*கடந்த வாரம் ஒரு கிலோ துவரம்பருப்பு ரூ.63–க்கு விற்பனையானது, தற்போது ரூ.74 ஆகவும், தான்சானியா துவரம்பருப்பு கடந்த வாரம் கிலோ ரூ.58–க்கு விற்பனையானது, ரூ.68 ஆகவும், அமெரிக்கா டர்க்கி துவரம்பருப்பு கடந்த வாரம் கிலோ ரூ.45–க்கு விற்பனையானது, ரூ.53 ஆகவும் உயர்ந்துள்ளது.*
*இதேபோல முதல் ரக உளுத்தம்பருப்பு கடந்த வாரம் கிலோ ரூ.63–க்கு விற்பனையானது, ரூ.70 ஆகவும், பர்மா உளுத்தம்பருப்பு கடந்த வாரம் கிலோ ரூ.55–க்கு விற்பனையானது ரூ.63 ஆகவும் அதிகரித்துள்ளது. இந்த ஆண்டு இந்தியா முழுவதும் சர்க்கரை உற்பத்தி 1½ கோடி டன் அதிகரித்துள்ளது. இதனால் சர்க்கரை விலை குறைந்துவருகிறது. கடந்த வாரம் கிலோ ரூ.35–க்கு விற்பனையானது ரூ.32 ஆக குறைந்துள்ளது. கரும்பு விளைச்சல் அதிகரிப்பால் சர்க்கரை விலை மேலும் குறைய வாய்ப்பு இருப்பதாக வியாபாரிகள் எதிர்பார்க்கிறார்கள்.*

## கூடலூர் பகுதியில் அறுவடைக்கு தயார்:

# கத்தரிக்காய் விளைச்சல் அமோகம்

கூடலூர், ஏப்.1–

கூடலூர் பகுதியில் நீலநிற கத்தரிக்காய் விளைச்சல் அமோகமாக இருக்கின்றது. இதனால் அறுவடைக்கு கத்தரிக் காய்கள் தயார் நிலையில் உள்ளது. மேலும் நல்ல விலையும் கிடைத்து வருவதாக விவசாயிகள் மகிழ்ச்சி அடைந்துள்ளனர்.

### நெய்மணக்கும் கத்தரிக்காய்

கூடலூர் மண்வயல், கம்மாத்தி, புத்தூர்வயல் ஆகிய பகுதிகளில்நூற்றுக்கணக்கான ஏக்கர் பரப்பளவில் நீலநிற கத்தரிக்காய் செடிகள் பயிரிடப்பட்டுள்ளது.

இந்த பயிர்கள் நன்கு விளைந்து அறுவடைக்கு தயார் நிலையில் உள்ளது. இலங்கையை பூர்வீகமாக கொண்ட நீலநிற கத்தரிக்காய் நீலகிரி மாவட்டத்தில் கூடலூர் பகுதியில் அதிகளவு விளைவிக்கப்படுகின்றன. வெள்ளை நிற கத்தரிக்காய் மேட்டுப்பாளையம், காரமடை உள்பட கோவை மாவட்டத்தில் அதிகளவு பயிரிடப் பட்டுள்ளன.

### நீலநிற கத்தரிக்காய்

நீலகிரி மாவட்டத்தில் கூடலூர் பகுதியில் அனைத்து வகையான காய்கறிகள் பயிரிடப்பட்டு அறுவடை செய்யப்படுகின்றன. தேயிலை விலை வீழ்ச்சி ஏற்பட்டதால் பாகற்காய், புடலங்காய், பீன்ஸ், பஜ்ஜி மிளகாய், நூல்கோல், பீன்ஸ், கத்தரிக்காய் ஆகியவைகளை பயிரிடுவதில் கூடலூர் விவசாயிகள் கவனம் செலுத்த தொடங்கினர்.

தற்போது இக்காய்கறிகள் நன்கு விளைந்துள்ளன. இதனால் விளைந்த காய்கறிகளை மொத்த வியாபாரிகள், விவசாயிகளிடம் இருந்து குறிப்பிட்ட தொகையை வழங்கி வாகனங்களில் ஏற்றி கேரள மாநிலத்துக்கு கொண்டு செல்கின்றனர். நீலநிற கத்தரிக் காய் விளைச்சலும் கூடலூர் பகுதியில் அதிகரித்துள்ளதால் கிலோ ரூ.5 முதல் ரூ.8 வரை விலை கிடைக்கிறது. வரும் மாதங்களில் இந்த கத்தரிக்காய் விளைச்சல் இன்னும் அதிகரிக்கும் அப்போது விலை குறைய வாய்ப்பு உள்ளதாக கூடலூர் விவசாயிகள் கருத்து தெரிவித்துள்ளனர்.



கூடலூர் கம்மாத்தி பகுதியில் ஒரு தோட்டத்தில் பயிரிட்டுள்ள நீலநிற கத்தரிக்காய் செடிகளை படத்தில் காணலாம்.

# வேளாண்மை செய்திகள்

## அதிக லாபம் தரும் பேரீச்சம் பழ சாகுபடி



ஈச்ச மரம் என்று அழைக்கப்படும் பேரீச்சை மரம் அரபு நாட்டின் பொக்கிஷம் ஆகும். உலக வரலாற்றில் மிக பழமையானதாக இந்த மரம் கருதப்படுகிறது. உலக அளவில் உற்பத்தி ஆகும் பேரீச்சையில் சுமார் 69 சதவீதம் அரபு நாடுகளில் தான் விளைவிக்கப்படுகிறது. தென்னைமர குடும்பத்தைச் சேர்ந்த பேரீச்சம் மரம் ஓங்கி வளர்ந்து வருடத்துக்கு ஒரு முறை மகசூல் கொடுக்கும் தன்மை கொண்டது. இந்தியாவை பொறுத்தவரை குஜராத், ராஜஸ்தான் ஆகிய மாநிலங்களில் இந்த மரம் அதிகம் காணப்படுகிறது.

தமிழ்நாட்டில் திருச்சி, நெல்லை, தர்மபுரி ஆகிய மாவட்டங்களில் அதிக அளவில் பேரீச்ச மரம் பயிரிடப்பட்டு வருகிறது. சுதிரி, சக்கி, சகரா, லூலூ, கலாஸ் ஆகிய ரகங்கள் நம் மண்ணிற்கும் தட்பவெப்ப நிலைக்கும் ஏற்ற ரகங்களாகும். 3 வயது முதல் 150 ஆண்டுகள் வர மகசூல் தரக்கூடியது பேரீச்சை மரம்.

### மண்வகை

பேரீச்சை மரத்தை வளர்ப்பதற்கு மணற்பாங்கான மண் மற்றும் சிறந்த வடிகால் வசதி தேவை. உப்பு தன்மை உடைய மண்ணை தாங்கி வளரும் தன்மை கொண்டது. எனவே தரிசு மற்றும் உவர் தன்மை கொண்ட நிலங்களிலும் இந்த மரத்தை பயிரிடலாம். அதிக குளிர் மற்றும் வெப்பத்தை தாங்கி வளரும் மரம் பூத்து காய்க்கும் தருணத்தில் மட்டும் மழை அல்லது பனி மூட்டம் மகசூலை பாதிக்கும். பூக்கள் அனைத்தும் காயாக மாறி பின் கனியாக உருமாற வெப்பம் தேவை.

### பாசனம்

3 முறைகளில் பேரீச்ச மரக் கன்றுகளை உற்பத்தி செய்யலாம். முதலில் விதை மூலமாகவும் இரண்டாவதாக பக்கவாட்டில் இருந்து வெளிப்படும் கிளை கன்றுகளை பறித்து நடலாம். 3–வதாக திசு வளர்ப்பு முறையில் தரமான கன்றுகளை உற்பத்தி செய்து நடலாம்.

பேரீச்சை மரத்தின் வேர்கள் பூமிக்கடியில் 7 அடி வரை மட்டுமே செல்வதால் மேலோட்டமான பாசன முறை நல்லது. குறிப்பாக சொட்டு நீர் பாசனம் போதுமானது. மாதத்துக்கு 2 முதல் 3 முறை பாசனம் செய்தால் போதும். தென்னை மரத்தை போல மரத்தை சுற்றி பாத்தி அமைத்து பாசனம் செய்யலாம்.

### உர மேலாண்மை

மரத்துக்கு மரம் 30 முதல் 50 கிலோ தொழு உரம் அல்லது இயற்கை உரம் போதுமானது. செப்டம்பர் மாதம் முதல் நவம்பர் மாதங்களில் உரமிடுவது நல்லது. மரத்தின் வளர்ச்சியை பொறுத்து 3 கிலோ டி.ஏ.பி., உரத்தை மரத்தை சுற்றி பாத்திகள் அமைத்து அளிக்கலாம்.

வருடத்துக்கு ஒருமுறை கவாத்து செய்ய வேண்டும். டிசம்பர் மற்றும் ஜனவரி மாதங்களில் கவாத்து செய்வது நல்லது. மரத்தில் உள்ள காய்ந்த ஓலைகளை நீக்கி மரத்தை சுத்தமாக வைத்திருக்க வேண்டும். மரத்தில் பூ பூக்கும் முன்னர் கவாத்து செய்ய வேண்டும்.

### மகரந்த சேர்க்கை

பேரீச்சை மரத்தில் ஆண் மற்றும் பெண் பூக்கள் ஒரே பாளையில் அமைந்திருக்கும். தன் மகரந்த சேர்க்கையும் பூச்சி மற்றும் தேனி மூலம் அயல் மகரந்த சேர்க்கையும் இயற்கையாகவே நடைபெறும்.

எனினும் ஆண் பூக்களை தனியாக வெட்டி எடுத்து நிழலில் காயவைத்து மகரந்த பொடிகளை சேமித்து பின்னர் பெண் பூக்களில் தூவி ஒட்டுமுறையில் வளர்க்க நல்ல மகசூல் கிடைக்கும்.

### நோய் கட்டுப்பாடு–அறுவடை

சிகப்பு கூன் வண்டு தாக்குதல் மிக முக்கியமானது. இலைப்புள்ளி நோய் மற்றும் தேன் போன்ற திரவம் வடியும் பூஞ்சாண நோய்களும் காணப்படும். தக்க வேளாண்மை ஆலோசகரை அணுகி பயிர் பாதுகாப்பு முறையை மேற்கொள்ளலாம்.

பொதுவாக திடமான மரத்தில் 10 முதல் 25 குலைகள் வரை காணப்படும். நல்ல தரமான காய்கள் வேண்டும் எனில் 8 குலைகளை மட்டும் தக்க வைத்துக் கொண்டு மற்ற குலைகளை வெட்டி எடுத்து விட வேண்டும். ஒரு திடமான குலையை வளர்க்க 8 ஓலைகள் தேவை. மரம் ஒன்றுக்கு 100 முதல் 250 கிலோ வரை பேரீச்சம் பழங்கள் கிடைக்கும். இதற்காக ஏக்கருக்கு ரூ.25 ஆயிரம் செலவு ஆகும். 5 ஆண்டுகளுக்கு பிறகு ரூ.6 லட்சம் வரை லாபம் கிடைக்க வாய்ப்பு உள்ளது.

### மருத்துவ குணங்கள்

பேரீச்சம் பழத்தில் அதிக அளவில் இரும்பு சத்து உள்ளதால் ரத்தத்தை சுத்திகரித்து ரத்த சோகை போன்ற நோய்களில் இருந்து மனிதனை காக்கிறது. அதிக நார்ச்சத்து கொண்டதால் வயிறு சம்பந்தமான நோய்களுக்கு மருந்தாக பயன்படுகிறது.

60 சதவீதத்துக்கு மேல் சர்க்கரை சத்து அடங்கி இருப்பதால் சர்க்கரை நோயாளிகளும் இந்த பழத்தை சாப்பிடலாம். பலவகையான உணவு பொருட்கள் பேரீச்சம் பழத்தில் இருந்து தயாரிக்கப்படுகிறது.

தகவல்:– ஏ.கபீர், வேளாண் ஆலோசகர்,
வேளாண் நிலையம், தாராபுரம்.

## வீட்டுக்கு ஒரு எலுமிச்சை மரம்

தமிழ்நாட்டில் எலுமிச்சை அறுவடை குறைவு என்ற காரணத்தால், ஆந்திர மாநில சந்தையிலிருந்து காய்களை வாங்குவதாக வியாபாரிகள் கூறுகிறார்கள். கோடை காலத்தில் தாகம் தீர்க்க எலுமிச்சையின் பங்கு முக்கியமாகிறது. வீட்டுக்கு ஒரு எலுமிச்சை மரம் நடுவது பலனளிக்கும்.

குறைவான இடத்தில் நிறைவான லாபம் வேண்டும் என்று எதிர்பார்க்கும் விவசாயிகளும் எலுமிச்சை சாகுபடியில் இறங்கலாம். எக்கருக்கு

மண்ணின் நீர்பிடிப்பு தன்மையை பொறுத்து 4 நாட்களுக்கு ஒரு முறை தண்ணீர் பாய்ச்ச வேண்டும்.

செடிகள் காய் பிடிக்கிற நிலையில், இலைச்சுருட்டு புழுக்களும், இலைப்புள்ளி நோய்களும் செடிகளை தாக்கும். இதற்கு தொடக்க நிலையில் மோனோ குரோட்டோபாஸ் மற்றும் சன் காப்பர் மருந்துகளை கலந்து தெளிக்கலாம். காய்கள் பிடித்து விட்ட பிறகு எந்த பிரச்சனையும்